*மாற்றம் மற்றும் மறுசீரமைப்புக்கான காலம்*

*2026 மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிதியாண்டை திரும்பிப் பார்க்கையில், இலங்கைக்கும் பரந்த சர்வதேச பொருளாதாரத்திற்கும் மற்றுமொரு மாற்றம் மற்றும் மறுசீரமைப்புக்கான காலப்பகுதியாக இருந்தது என்பதை நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். பெரும்பொருளாதார உறுதிப்பாடு தொடர்பில் உள்நாட்டில் வெளிப்பட ஆரம்பித்துள்ளதுடன், தொழிற்பாட்டு சூழல் தொடர்ந்தும் வாய்ப்புகள் மற்றும் நெருக்கடிகளை வெளிப்படுத்தியிருந்தது. ஆண்டில் பணவீக்கம் சார்ந்த அழுத்தங்கள் ஓரளவு குறைந்து காணப்பட்ட நிலையில், நாணயமாற்று விகிதங்கள் முன்னைய ஆண்டு காலப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் உறுதியான நிலையை வெளிப்படுத்தியிருந்தது. மேலும், கொள்கை வழிகாட்டல்களை முன்கூட்டியே கணிக்கக்கூடியதாகவும் இருந்தது.*

*புவிசார் அரசியல் நிலைவரங்கள்*

*புவிசார் அரசியல் நிலைவரங்கள் மேலும் சிக்கல் நிலையை தோற்றுவித்திருந்தது. தொடர்ந்து நிலவும் சர்வதேச வர்த்தக முறுகல்கள், விநியோகத் தொடர் மீளமைப்புகள் மற்றும் சர்வதேச அரசியல் ஸ்திரத்தன்மை இன்மைகள் போன்றன பொருட்களின் விலைகள், சரக்குகள், சர்வதேச கொள்வனவுகள் மற்றும் சந்தைகளில் நம்பிக்கைத்தன்மை போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. குறிப்பாக, இலங்கை தனது வர்த்தகம், சுற்றுலா, வெளிநாட்டு பண அனுப்பல்கள் மற்றும் நிதிவசதி போன்றவற்றை எதிர்பார்க்கும் சந்தைகள் பாதிப்படைந்திருந்தன. இந்த நிலைமைகள், சர்வதேச கொள்கைகள் மற்றும் விநியோக வலையமைப்புகளுடன் ஆழமான தொடர்பைக் கொண்டிருக்கும் DIMO ஐ பெரிதும் பாதித்திருந்தது.*

*இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் நேர்த்தியான பெறுபேறுகளை ஏற்படுத்தியுள்ள போதிலும், சர்வதேச வர்த்தகக் கொள்கையின் தளம்பல்கள் மற்றும் சர்வதேச அரசியல் நெருக்கடிகள் போன்றன இலங்கையின் பெரும்பொருளாதாரம் மற்றும் சமூக உறுதிப்பாட்டில் இடரை ஏற்படுத்தக்கூடும் என சர்வதேச நாணய நிதியம் குறிப்பாக தெரிவித்திருந்தது.*

***மீண்டெழுந்திறனுடன் திகழ்தல்***

*இவ்வாறான சூழலில், DIMO நீண்ட கால மதிப்பு உருவாக்கத்தை மையமாகக் கொண்டு, மீண்டெழும் திறன் மற்றும் உறுதியாக தனது மூலோபாய முன்னுரிமைகளைத் தொடர்ந்து பின்பற்றியது. ஏழு பிரிவுகளில் பரந்துள்ள எமது பன்முகப்படுத்தப்பட்ட வணிக மாதிரி, குறுகிய கால ஏற்ற இறக்கங்களைத் தாங்குவதற்கும், அதேவேளை குழுமத்தை நிலையான வளர்ச்சியை நோக்கி நிலைநிறுத்துவதற்கும் வலுவான அடித்தளத்தைத் தொடர்ந்து வழங்கியது. இந்த நிதியாண்டின் தொடக்கத்திற்கு சற்று முன்னர் வாகன இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்பட்டமை, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வாகன இறக்குமதித் தடை விதிக்கப்பட்டபோது இருந்ததை விட முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழலில் புதிய வாய்ப்புகளை மீண்டும் திறந்துள்ளது.*

*முக்கியமாக, ஆளுகை, நல்லொழுக்கமான நடத்தை மற்றும் பங்காளர் நம்பிக்கை ஆகியவற்றுக்கு முன்னுரிமையளித்து தொடர்ந்தும் செயலாற்றியிருந்தோம். உறுதியற்ற காலப்பகுதிகளில் வியாபாரத்தின் மீதான நம்பிக்கையை தக்க வைத்துக் கொள்வதற்கு இந்த அரண்கள் முக்கியமானவை என்பதை உணர்ந்து இதனை நாம் மேற்கொண்டிருந்தோம். எமது மக்கள் சிறந்த அர்ப்பணிப்பு மற்றும் மாறும் திறனை வெளிப்படுத்தியிருந்ததுடன், சர்வதேச பங்காளர்கள் மற்றும் உள்நாட்டு பங்காளர்களுடனான எமது நீண்ட கால பங்காண்மைகளினூடாக, தடங்கல்களை வெற்றிகரமாக தகர்த்து, செயற்பாட்டு வினைத்திறனை தக்க வைத்துக் கொள்ள முடிந்தது.*

***மத்திய கிழக்கு யுத்தம்***

*மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் மத்திய கிழக்கில் முற்றிய யுத்தநிலை காரணமாக, மீட்சியடைந்த வண்ணமிருந்த இலங்கையின் பொருளாதாரத்திற்கு புதிய தாக்கத்தை தோற்றுவித்திருந்தது. சகல துறைகளையும் சேர்ந்த வர்த்தகங்களுக்கு நேரடியாக இந்தத் தாக்கம் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வலு மூலங்களில் பெருமளவில் தங்கியுள்ள நாடு எனும் வகையில், யுத்தம் காரணமாக அதிகரித்த எரிபொருள் விலைகள், கப்பல் போக்குவரத்து பாதைகளில்*

தடங்கல்கள் மற்றும் அதிகரித்துச் செல்லும் சரக்கு கையாளல் மற்றும் காப்புறுதி செலவுகள் போன்றவற்றின் தாக்கத்தை இலங்கை உணர்ந்திருந்தது.

**தித்வா புயல்**

கடந்த ஆண்டில் ஏற்பட்ட தித்வா புயல் காரணமாக, எமது பொருளாதாரத்தில் மேலும் தடங்கல் தோற்றுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த தாக்கத்தினால் DIMO க்கு ஏற்பட்டிருந்த நேரடிப் பாதிப்புகள் மிகவும் குறைவாக இருந்தாலும், எமது சில வியாபார பங்காளர்களின் வளாகங்களுக்கு சேதங்கள் ஏற்பட்டிருந்தன. இந்த அனர்த்தத்தின் பின் பாரிய இழப்புகள் ஏதுமின்றி, உடனடியாக எம்மால் வியாபார செயற்பாடுகளை ஆரம்பிக்க முடிந்திருந்தமை உண்மையில் அதிர்ஷ்டவசமானதாக அமைந்திருந்தது. நம்பிக்கையை வென்ற வியாபாரப் பங்காளர் எனும் வகையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு தனது உதவிகளையும் DIMO வழங்கியிருந்தது.

**தடைகளைத் தகர்த்தல்**

இந்த ஆண்டில் குழுமத்தின் புரள்வு ரூ. 104 பில்லியனாகும் (ரூ. 50 பில். – 2024/25), முதன் முறையாக ரூ. 100 பில்லியன் இலக்கை எய்திய மைல்கல் சாதனையாக இது அமைந்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 107% அதிகரிப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது.

**வாகனங்கள் சந்தை**

மீளத் திறக்கப்பட்ட வாகன சந்தை, இறக்குமதி தடை செய்யப்பட்டதற்கு முன்னர் காணப்பட்டதை விட மாறுபட்டதாக அமைந்திருந்தது. வாகனத் தெரிவுகள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்யும் விநியோகத்தர்கள் போன்றவற்றில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை அவதானிக்க முடிந்தது. மின்சார வாகனங்களுக்கான கேள்வி பெருமளவில் அதிகரித்துள்ளதுடன், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் மீதும் நாட்டம் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்தது. அந்த சந்தைப் போக்குகளுக்கு ஏற்ப கேள்வியை நிவர்த்தி செய்யும் ஆற்றலை DIMO குழுமம் கொண்டுள்ளது.

**தொழில்னுட்ப முன்னேற்றங்கள்**

உலகம் துரித கதியில் தொழில்னுட்ப முன்னேற்றங்களுக்கு முகங்கொடுத்த வண்ணமுள்ளது. குறுகிய காலப்பகுதியில் புதிய தொழில்னுட்பத்தில் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. இதன் காரணமாக நிறுவனங்களும் துரிதமாக செயலாற்ற வேண்டியுள்ளது அல்லது அவை தம்மை வெளி உலகிலிருந்து அந்நியப்படுத்திக் கொள்ளும் சூழலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படும். புதிய தொழில்னுட்பத்தை பின்பற்றுவதற்காக உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்தும் வகையில் பரந்த தரவுக் கட்டமைப்பை உருவாக்கும் முதல் படியாக பல மொடியுல்களைக் கொண்ட SAP இன் நடைமுறைப்படுத்தல் அமைந்திருந்தது. குறுகிய, மத்திய மற்றும் நீண்ட கால அடிப்படையில் தொழில்னுட்ப பின்பற்றலுக்கு உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், பொருத்தமான தொழில்னுட்பத்தை ஒன்றிணைப்பதற்கான வாய்ப்பையும் SAP வழங்கும்.

நிதியாண்டில் தொழில்னுட்பம் மற்றும் டிஜிட்டல் மாற்றம் போன்றன DIMO இன் மூலோபாய நிகழ்ச்சி நிரலில் மையமாக அமைந்திருந்தன. செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும் மற்றும் தரவு சார்ந்த முடிவெடுத்தலை சாத்தியமாக்கவும் டிஜிட்டல் கருவிகள் மற்றும் தளங்களை ஏற்றுக்கொள்வதை குழுமம் துரிதப்படுத்தியது. நிறுவனசார் அமைப்புகள், செயல்முறை தன்னியக்கமயப்படுத்தல் மற்றும் பகுப்பாய்வு திறன்கள் போன்றவற்றில் செய்யப்பட்ட முதலீடுகள், விநியோகச் சங்கிலித் தெளிவுத்தன்மை, சரக்கு இருப்பு நிர்வகிப்பு மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றை மேம்படுத்த பங்களித்தன. டிஜிட்டல் ஈடுபாட்டுத் தளங்கள் மேலும் வலுப்படுத்தப்பட்டன. நிறுவன ரீதியிலான தளமான SAP ஐ நடைமுறைப்படுத்துவதற்கான இரண்டாம் கட்டம் தற்போது நடைபெற்று வருகிறது, அது நிறைவடைந்ததும் தெளிவுத்தன்மை, பகுப்பாய்வு திறன்கள் மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தை கணிசமாக மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரத்தில், ஒரு குழுமமாக,

*எங்களது தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தொழில்னுட்ப அளவையும், வாடிக்கையாளர்களுக்கான அதன் விநியோகத்தையும் மேம்படுத்த நாங்கள் முனைகிறோம்.*

**மூலோபாயம்**

*பன்முகப்படுத்தல், வேறுபடுத்தல் மற்றும் கைகோர்ப்பு ஆகிய குழுமத்தின் வளர்ச்சிக்கான மூலோபாய உந்துசக்திகள் எமது ஊழியர்கள், தொழில்னுட்பம், நிலைத்தன்மை மற்றும் வர்த்தக நாம மதிப்பு ஆகியவற்றின் மூலம் இயக்கப்படுகின்றன. எனவே, இந்த இயக்கிகளை வழங்கும் வளங்கள் கவனமாக வளர்த்தெடுக்கப்படுகின்றன. எங்களது பன்முகப்படுத்தல் மூலோபாயம் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளின் போது தனது மதிப்பை நிரூபித்தது, இது குழுமத்திற்கு மாற்று வணிக வழிகளை வழங்கியதுடன் எங்களது மீண்டெழும் திறனையும் வலுப்படுத்தியது. தொழில்னுட்பம், வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் நிலைத்தன்மை ஆகியன எதிர்காலத்தில் வேறுபடுத்தல் மூலோபாயத்தின் இயக்கிகளாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

**நிலைபேறாண்மை**

*நிலைபேறாண்மையில் கூட்டாண்மை நிறுவனமொன்றினால் ஆற்றப்பட வேண்டிய பங்களிப்பு தெளிவானதாக அமைந்துள்ளது. எங்களது பங்குதாரர்களுக்கு மதிப்பை உருவாக்குவதற்கான ஒரு வழியாக நிலைபேறாண்மையை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். DIMO இன் நிலைபேறாண்மை நிகழ்ச்சி நிரல் 2030 என்பது நிலைபேறாண்மை சார்ந்த அபாயங்கள் மற்றும் வாய்ப்புகளை நிர்வகிப்பதற்கும், எங்களது வணிக மாதிரிகளில் நிலைபேற்றுத் தன்மையை மேம்படுத்தி உட்புகுத்துவதற்குமான குழுமத்தின் மூலோபாயத்தைக் கொண்டுள்ளது.*

**எமது கூட்டாண்மை செல்வம்**

*ஒரு நிறுவனமாக, நாம் எப்போதும் எங்களது கூட்டாண்மைச் செல்வத்தை ஒரு ஒட்டுமொத்த கண்ணோட்டத்தில் பார்க்கிறோம். நாணயமாக்கப்பட்ட மூலதனங்களான எங்களது நிதி மற்றும் உற்பத்தி மூலதனங்கள் மற்றும் உறவுகள், மனித வளங்கள், இயற்கை வளங்கள் மற்றும் அறிவுசார் மூலதனங்கள் போன்ற வடிவங்களில் வரும் நாணயமாக்கப்படாத மூலதனங்கள் ஆகியவை கவனமாக மதிப்பிடப்பட்டு வளர்க்கப்படுகின்றன. எனவே, நாங்கள் தயாரிக்கும் ஒருங்கிணைந்த அறிக்கை, முதலீட்டாளர்களும் சாத்தியமான முதலீட்டாளர்களும் எங்களிடம் உள்ள கூட்டாண்மைச் செல்வத்தையும், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் பங்குதாரர்களுக்கு மதிப்பை உருவாக்குவதற்கான அதன் திறனையும் மதிப்பிட உதவுகிறது.*

**பங்குதாரர்களுக்கான நிதிசார் வருமதிகள்**

*இந்த ஆண்டில் எய்தப்பட்ட பங்கொன்றின் மீதான உழைப்பு விகிதம் ரூ. 172.37 ஆக காணப்பட்டது (2024/25 இல் ரூ. 137.00 எனும் மறைப் பெறுமதி எய்தப்பட்டிருந்தது), பல வருடங்களின் பின் நாம் எய்திய உயர்ந்த பெறுமதியாக இது அமைந்துள்ளது. வாகன இறக்குமதிக்கு மீள அனுமதி வழங்கப்பட்டமை மற்றும் பொருளாதார சூழல் உறுதியடைந்திருந்தமை போன்றவற்றினால் எம்மால் வியாபார செயற்பாடுகளை வழமை போல முன்னெடுக்க முடிந்தமை இதில் பங்களிப்புச் செலுத்தியிருந்தது.*

**பணிப்பாளர் சபை**

*கடந்த ஆண்டில் பணிப்பாளர் சபையில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக பணிப்பாளர் சபைக் குழுக்களிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. கடந்த ஆண்டில் பணிப்பாளர் சபையிலிருந்து ஓய்வு பெற்ற திரு. ஏ.டி.பி. தல்வத்தே அவர்களின் அளப்பரிய பங்களிப்புக்காக நான் நன்றி தெரிவிக்கிறேன். அத்துடன், கடந்த ஆண்டில் பணிப்பாளர் சபையில் இணைந்து கொண்ட புதிய அங்கத்தவர்களை அன்புடன் வரவேற்கிறேன்.*

*நிறுவனத்தை வழிநடத்துவதில் விலைமதிப்பற்ற ஆலோசனைகளை வழங்கிய ஒரு பணிப்பாளர் சபையை எப்போதும் கொண்டிருப்பதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். இவ்வருட பெறுபேறுகளை எய்துவதற்கு பங்களிப்புச் செய்த சபையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எனது நன்றிகள்.*

*எனது குழுவினர்*

*எமது பிரதான வியாபாரமான வாகன விற்பனை கடந்த ஐந்தாண்டுகளாக முடக்கப்பட்டிருந்த கடினமான காலப்பகுதியில், எமது குழுவின் அங்கத்தவர்கள் முன்வந்து DIMO இன் தற்போதைய நிலையை வழிநடத்தியிருந்தனர். இந்த கடினமான காலப்பகுதியில் DIMO இன் தோற்றத்தை மாற்றியமைப்பதற்கும், புத்தாக்கமான அறிமுகங்களை மேற்கொள்ளவும் அவர்கள் பெரிதும் பங்களிப்புச் செய்திருந்தனர். அவர்களின் பங்களிப்புக்காக நான் நன்றி தெரிவிப்பதுடன், எமது திட்டங்களுக்கு அப்பாலான பெறுபேறுகளை எய்த காரணமாக இருந்தமைக்காகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.*

***சவால்கள்***

*வாகன இறக்குமதி balance of payment மூலம் பொருளாதாரத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று பரவலாக நம்பப்படுகிறது. எனவே, இது அரசாங்கத்தின் தொடர்ச்சியான கவனத்திற்குரிய ஒரு விடயமாக மாறியுள்ளதுடன், வாகன இறக்குமதியின் அளவை ஒழுங்குபடுத்துவதற்காக கட்டணங்கள் மற்றும் விதிமுறைகளில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இது எப்போதும் உடனடி எதிர்காலம் மற்றும் இந்த வர்த்தகத்தின் வாய்ப்புகள் பற்றிய நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்துகிறது. எங்களது பன்முகப்படுத்தல் மூலோபாயம் இந்த சவாலை முறியடிக்க எங்களுக்கு உதவியுள்ளது. மேலும் வாகன வியாபாரத்தில் முன்னேற்றம் மற்றும் புதுமைகளை நாங்கள் நாடுவதைப் போலவே, எங்களது வாகனம் அல்லாத பிற வர்த்தகங்களையும் தொடர்ந்து வலுப்படுத்துவோம்*

*மற்றுமொரு சவாலாக, மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமை காரணமாக இலங்கையின் பொருளாதாரம் மற்றும் விநியோக சங்கிலிக்கு பெருமளவு தாக்கம் ஏற்பட்டுள்ளது. அவசியமாயின், அவ்வாறான சவால்களிலிருந்து மீண்டு வருவதற்கு நிறுவனம் அவசரத் திட்டங்களை கொண்டுள்ளது.*

***எதிர்கால நோக்கு***

*இலங்கையின் பொருளாதார மீட்சி தொடர்பில் நாம் அவதானமாக கவனம் செலுத்துவதுடன், வெளியக தாக்கங்கள் மற்றும் புவிசார் அரசியல் உறுதியற்ற சூழல்கள் பற்றியும் அவதானித்து வருகிறோம். புத்தாக்கம், ஒழுக்கமான நிறைவேற்றல் மற்றும் தெளிவான மூலோபாய நோக்கு போன்றவற்றினூடாக, எழும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்கு DIMO தயாராக உள்ளது.*

*கடந்த காலங்களில், நிறுவனம் பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டிருந்தது. இந்த முதலீடுகளின் பிரதான நோக்கு, பரந்தளவு பிரிவுகளினூடாக இடர்களை நிர்வகித்து, வளர்ச்சியை நோக்கி பயணிப்பதாகும். பெருமளவான முதலீடுகள் முக்கியமான நிலையை எய்தியுள்ளதுடன், அவற்றை மீளாய்வு செய்து, அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளின் எய்தல்கள் பற்றி ஆராய்ந்து, அவற்றின் எதிர்காலத்தைப் பற்றி தீர்மானிக்க வேண்டியுள்ளது. எமது பன்முகப்படுத்தல் மூலோபாயத்தில் இது முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமாக அமைந்துள்ளது.*

*வெளியகக் காரணிகளால் பெரும்பொருளாதார நிலைக்கு ஏற்படும் மோசமான தாக்கங்கள் மற்றும் கட்டண மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் காரணமாக வாகன இறக்குமதியில் ஏற்படும் தாக்கங்கள், வாகன வர்த்தகத்தை தொடர்ந்து பாதிக்கலாம். அதேநேரத்தில், நாட்டின் பொருளாதாரத்தை கவனமாக நிர்வகிப்பது, நாம் தற்போது செயல்பட்டு வரும் பிரிவுகளில் புதிய வாய்ப்புகளை நமக்கு வழங்கக்கூடும். ஒருவர் இதனை நேர்மறை மற்றும் எதிர்மறையான அம்சங்களின் ஒரு கலவையாகப் பார்க்கக்கூடும். எவ்வாறாயினும், தற்போதைய திட்டங்களின் பிரகாரம் நிறுவனம் தனது வளர்ச்சியை நோக்கி தொடர்ந்தும் செயலாற்றும் என்பதுடன், மற்றுமொரு சிறந்த பெறுபேற்றினூடாக இந்த ஆண்டையும் சிறப்பானதாக அமைந்திருக்கச் செய்யும்.*

தங்கள் நம்பிக்கைக்குரிய,

ரஞ்சித் பண்டிதகே

தவிசாளர்

*3 ஜுன் 2026*

கொழும்பு